**சீ.எப்.சீ. பவுன்டீன் (உத்தரவாதத்தால்) வரையறுக்கப்பட்ட கம்பனி -2016/ 2017**

---

சீ.எப்.சீ. பவுன்டீன் (உத்தரவாதத்தால்) வரையறுக்கப்பட்ட கம்பனியின் (கம்பனியின்) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த மூன்று (03) மாத காலத்திற்காக விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த மூன்று (03) மாத காலத்திற்காக நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற மீளாய்வு 03 மாத காலப்பகுதிக்கான கம்பனியின் செயற்பாடு தொடர்பாக எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினைத் தீர்மானித்தல் பணிப்பாளர் சபையின் (சபையின்) பொறுப்பாகும்.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. கம்பனியால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் கம்பனியால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்

தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 நிறுவனத்தை தாபித்தல்

''நிதி நகரம்'' - உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியினைத் தாபித்தல்'' என்ற தலைப்பிலான 16/2694/702/054 - 1 மற்றும் 2016 திசெம்பர் 16 ஆந் திகதிய அமைச்சரவை பத்திரத்திற்காக 2016 திசெம்பர் 20 ஆந் திகதிய அங்கீகாரத்தின் பிரகாரம் சீ.எப்.சீ. பவுன்டீன் (உத்தரவாதத்தால்) வரையறுக்கப்பட்ட கம்பனி 2016 திசெம்பர் 27 ஆந் திகதி தாபிக்கப்பட்டிருந்ததுடன் 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த மூன்று (03) மாத காலத்திற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஆகஸ்ட் 23 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சீ.எப்.சீ. பவுன்டீன் (உத்தரவாதத்தால்) வரையறுக்கப்பட்ட கம்பனியின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த மூன்று (03) மாத காலத்திற்காக அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் கீழே குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து;
கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் பேணப்படுகின்றன என்பதும்,

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

**2.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

---

2017 மார்ச் மாதத்திற்குரிய ரூபா 504,761 தொகையான தொழிர்சார் கட்டணங்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மீளாய்வு**

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வு மூன்று (03) மாத காலப்பகுதிக்காக கம்பனியின் செயற்பாட்டு வருமானம் செயற்பாட்டு செலவினத்திற்கு சமமாக இருந்ததுடன், ரூபா 2,352,147 தொகையான செயற்பாட்டு வருமானம் திறைசேரி மானியங்களாக இருந்தன

**4. செயற்பாட்டு மீளாய்வு**

---

**4.1 செயலாற்றல்**

---

நிதி நகர் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக தேவையான சட்ட ஆவணங்களை வரைவாக்குவதற்காக இக்கம்பனி உருவாக்கப்பட்டிருந்ததுடன் வரைவாக்கப்பட்ட கொழும்பு நிதி நகரச் சட்டம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு 2019 ஏப்ரல் மாதம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

---

.

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தினால் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஆகஸ்ட் 23 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.